

மொத்த பால் குளிர்விப்பான் மையத்தில் பால் வழங்குதல்



# பால்வளம்

## மக்கள் சாசனம்



மொத்த பால் குளிர்விப்பான் மையத்தில் பால் வழங்குதல்



# பால்வளம்

## மக்கள் சாசனம்

## பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | பால்வளத்துறையின் செயல்பாடுகள் | 1–2 |
| 3. | பால் கூட்டுறவு சங்கங்கள் | 2 |
| 4. | தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் | 3–6 |
| 5. | பால் உற்பத்தியாளர்கள் நலன் | 6–13 |
| 6. | பால் கூட்டுறவு ஒன்றியங்களின் செயல்பாடுகள் | 14–15 |
| 7. | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்) | 15–17 |
| 8. | தரக்கட்டுபாடு ஆய்வகம் | 17 |
| 9. | திட்டங்கள் | 18–23 |
| 10. | சிறப்புத்திட்டங்கள் | 23–26 |
| 11. | இணைப்பு – 1 | 27–30 |
| 12. | இணைப்பு – 2 | 31–35 |
| 13. | இணைப்பு – 3 | 36 |
| 14. | இணைப்பு – 4 | 37 |
| 15. | இணைப்பு – 5 | 38 |
| 16. | இணைப்பு – 6 | 39 |
| 17. | அட்டவணை – அ | 40 |
| 18. | அட்டவணை – ஆ | 41–43 |
| 19. | இணைப்பு – 7 | 44 |
| 20. | இணைப்பு – 8 | 45–47 |

# பால்வளத்துறை
# மக்கள் சாசனம் 2015 –2016

**முன்னுரை**

தமிழகத்தில், பால்வளத்துறை 1958ம் ஆண்டு துவங்கப்பட்டது. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர், மாநிலத்தில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களின் செயல் பதிவாளர் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநராக இருக்கிறார்.

புதிய பால் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல், சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளின் மீது நடவடிக்கை எடுத்தல், தேர்தல் நடத்துதல், நிர்வாகக் குழு அமைத்தல் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சங்கங்களுக்கு ஆணைகள் பிறப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988 ஆகியவற்றின்படி பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் செயல்படுத்தி வருகின்றார்.

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர், பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் கொள்முதல் செய்திடவும், சட்டரீதியான பணிகள், திட்டங்கள் வளர்ச்சிப்பணிகள் மற்றும் நிர்வாகப்பணிகளை மேற்கொள்ளவும் மாநில அளவில் துணை பால் ஆணையர் (கூட்டுறவு), செயற்பொறியாளர், துணைப்பதிவாளர் (தலைமையிடம்), பால்வள அலுவலர், கணக்கு அலுவலர், வேளாண்மை அலுவலர் மற்றும் கள அளவில் 25 துணைப்பதிவாளர்கள், அயற்பணி கால்நடை மருத்துவர்கள் தலைமையில் 11 பால் சேகரிப்புக் குழுக்கள் மற்றும் 13 நடமாடும் கால்நடை அலகுகள் உதவியாக உள்ளன.

**2) பால்வளத்துறையின் செயல்பாடுகள்**

- பால்வளத்துறையில் பால் கூட்டுறவு சங்கங்கள் மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகின்றன.
- பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களிடமிருந்து, பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது.
- பால் உற்பத்தியை மேம்படுத்துதல், உற்பத்தியாளர்களுக்கு பாலின் தரத்திற்கேற்ப விலை கிடைக்கச் செய்தல், கால்நடைகளின் பால் உற்பத்தியை அதிகரிக்க தரமான இடுபொருட்கள், கால்நடைகளுக்கு செயற்கைமுறை

கருவூட்டல் மற்றும் மருத்துவ சிகிச்சை அளித்தல் போன்ற பணிகளை பால் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்கின்றன.

- உணவு பாதுகாப்பு வழிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட தரமான பால், நியாயமான விலையில் தொடர்ந்து நுகர்வோர்களுக்கு கிடைக்கச் செய்வதை மாவட்ட ஒன்றியங்கள் உறுதிபடுத்துகின்றன.
- அமைப்புசாரா பால் உற்பத்தித் தொழிலை, ஒருங்கிணைந்த அமைப்புசார் தொழிலாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகின்றது.
- பால் பதப்படுத்துதல், சமன்படுத்துதல் மற்றும் பைகளில் அடைத்தல் போன்ற பல்வேறு நிலைகளில் நவீன தொழில் நுட்பங்கள் பால்பண்ணைகளில் புகுத்தப்படுகின்றன.
- பால்பண்ணைத் தொழில், இதர தொழில்களின் வளர்ச்சிக்கு நிகராக தொடர்ந்து வளர்ச்சியடையத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.
- கால்நடைத் தீவனம் தயாரிப்பது மற்றும் பிற வழிகளில் கால்நடைத் தீவனத்தை பெற்றுத் தருவதின் மூலம் ஆண்டு முழுவதும் கறவை மாடுகளுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்கின்றது.

## 3) பால் கூட்டுறவு சங்கங்கள்

பால்வளத்துறையின் கீழ் பால் கூட்டுறவுகள் கீழ்க்கண்டவாறு மூன்றடுக்கு முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த அமைப்பு ஆனந்த் பாணி (Anand Model) கூட்டுறவுகள் என அழைக்கப்படுகிறது.

**1) கிராமஅளவில் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள்**

**2) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்**

**3) மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ( ஆவின்)**

## 4. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள்

### 4.1. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள்

கிராம அளவில் 11,839 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன. இதில் மகளிரால் மட்டும் நிர்வகிக்கப்படும் சங்கம் 1,793 ஆகும். கிராம அளவில் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை சங்கங்கள் தினமும் இருவேளை கொள்முதல் செய்து மொத்த குளிர்விப்பான்கள்/ குளிரூட்டும் நிலையங்கள்/ பால் பண்ணைகளுக்கு அனுப்பி வருகின்றன.

பால் உற்பத்தியாளர்களின் வசதிக்கேற்ப வாராந்திரம் / பத்து நாட்களுக்கு ஒருமுறை பால்பண பட்டுவாடாவை பாலின் தரத்திற்கேற்ப தொடக்க பால் கூட்டுறவுகள் வழங்குகின்றன.

### 4.2.பால் கொள்முதல் அளவு (ஆண்டு சராசரி)

கிராம அளவில், பால் கூட்டுறவு சங்கங்களால் நாளொன்றுக்கு ஏறத்தாழ 33 இலட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் நாளொன்றுக்கு ஏறத்தாழ 3 இலட்சம் லிட்டர் வரை உள்ளூர் விற்பனை போக ஏறத்தாழ 30 இலட்சம் லிட்டர் வரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் கொள்முதல் செய்யப்படுகிறது.

### 4.3. தொடக்க பால் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கான வழிமுறைகள்

அ)

- கிராமத்தில் தொடக்க பால் கூட்டுறவு சங்கம் அமைக்க விரும்பும், பால் மாடுகள் வைத்துள்ள, சங்கத்திற்கு பால் ஊற்ற விருப்பமுள்ள, சங்க விவகார எல்லையில் வசிக்கின்ற, இந்திய ஒப்பந்தச் சட்டப்படி ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியான குறைந்தது 25 நபர்கள் ஒன்று சேர்ந்து மாவட்டத்திலுள்ள சரக துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களுக்கு சங்கம் அமைத்து தருமாறு மனு அளிக்க வேண்டும்.
- உத்தேச சங்கம் இலாபகரமாக செயல்படத் தேவையான அனைத்து விபரங்களையும் அளிக்க வேண்டும்.
- உத்தேச சங்க துணை விதி தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டம் மற்றும் விதிகளின்படி இருக்க வேண்டும்.
- உத்தேச சங்க விவகார எல்லை, ஏற்கனவே உள்ள சங்கத்தின் எல்லைக்குள் இருக்கக் கூடாது.

ஆ)

- மனு பெறப்பட்ட நாளிலிலிருந்து 120 நாட்களுக்குள் மேற்படி சங்கம் பதிவு செய்ய அனைத்து விவரங்களும் பெறப்பட்டது என்று திருப்தி அடையும் பட்சத்தில் துணைப்பதிவாளர் சங்கத்தை பதிவு செய்யலாம்.
- சங்கத்தை பதிவு செய்ய மறுக்கும் பட்சத்தில், மனு பெறப்பட்ட 120 நாட்களுக்குள் அதன் விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.
- மனு பெறப்பட்ட தேதியிலிருந்து 120 நாட்களுக்குள் மறுப்பு தெரிவிக்கப் படவில்லை என்றால் சரக துணைப்பதிவாளர் (பால்வளம்) மேற்படி சங்கத்தை பதிவு செய்துள்ளார் என்று கருதப்பட வேண்டும்.

**4.3. (1) சங்கம் பதிவு செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்**

1. மாவட்ட அளவில் செயல்படுகின்ற சரக துணைப்பதிவாளர் (பால்வளம்)
2. மாவட்ட அளவில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பொதுமேலாளர்
3. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் விரிவாக்க அலுவலர்
4. சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த முதுநிலை ஆய்வாளர் (பால்)
5. ஒன்றிய கால்நடை மருத்துவர்

**4.3. (2) தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராவதற்கு உரிய தகுதிகள்**

அ. சங்க விவகார எல்லையில் வசிக்க வேண்டும்.

ஆ. 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

இ. 1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (மத்திய சட்டம் 9/1872) பிரிவின் கீழ் ஒப்பந்தம் செய்ய தகுதி பெற்றிருக்க வேண்டும்

ஈ. சொந்தமாக கறவை மாடுகள் பராமரித்து சங்கத்திற்கு பால் வழங்க விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும்.

**4.3.(3) விண்ணப்பம்**

மேற்கண்ட தகுதிகளைக்கொண்ட பால் உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைந்து சங்கம் அமைப்பதற்கு வரிசை எண். 4.4(1)ல் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களை தொடர்பு கொண்டு இணைப்பு–1 மற்றும் 2–ல் விவரங்கள், பதிவு கட்டணம் ரூ.200/– (தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 –அட்டவணை –III) செலுத்தியதற்கான செலுத்துச்சீட்டு மற்றும் உத்தேச சங்கத்தின் மாதிரி துணைவிதி புத்தகங்களுடன்

அளிக்கப்பட வேண்டும். படிவங்களை நிரப்புதல் மற்றும் முதன்மைக்கூட்டம் நடத்துவதற்கு மேற்கண்ட அலுவலர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

**4.3.(4) ஒப்புதல் சான்று**

இணைப்பு–1 மற்றும் 2ல் காணும் படிவங்களின்படி விபரங்கள் முழுமையாக நிரப்பப்பட்டு மாவட்ட துணைப்பதிவாளர்(பால்வளம்) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இந்த மனுவை பெற்றதற்கான ஒப்புதல் மாவட்ட துணைப்பதிவாளர்(பால்வளம்) அவர்களால் இணைப்பு–3ல் உள்ள படிவத்தில் வழங்கப்படும்.

**4.3.(5). பதிவு செய்தல்**

மாவட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்) வரிசை எண்.4.4.(3)ல் தெரிவிக்கப்பட்டுள்ள படிவ விபரங்களை கள ஆய்வு செய்து, சான்றுகளை பரிசீலனை செய்து மேலும், அப்பகுதியில் உள்ள பால் உற்பத்தியை மதிப்பீடு செய்து, உத்தேச சங்கத்தினை பதிவு செய்வார். பதிவுச் சான்று, இணைப்பு–4ல் உள்ள படிவத்தில் (படிவம் எண்.6) உத்தேச சங்கத்தின் நிர்வாகக்குழுவிற்கு வழங்கப்படும்.

**4.3.(6) சங்கத்தில் உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட / உறுப்பினராக தொடர்வதற்கு தகுதியில்லாதவர்கள்**

1. பால் வியாபாரம் செய்பவர் அல்லது பால் பொருட்களை விற்கும் வியாபாரி
2. கடன் அடைக்க சக்தியற்றவர் (Insolvent) என அறிவிக்கப்பட விண்ணப்பம் செய்து கொண்டவர் அல்லது நொடிப்பு நிலை நீங்காதவர்.
3. ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட குற்றத்திற்காக யாதொரு சட்டத்தின் கீழ் ஒரு வருட காலத்திற்கு குறையாமல் தண்டிக்கப்பட்டிருந்து, அந்த தண்டனை ரத்து செய்யப்படாமல் இருந்து, தண்டனை முடிவடையும் தேதியிலிருந்து ஒராண்டு கால அளவு முடிவடையாமல் இருத்தல்.
4. உறுப்பினராக உள்ள சங்கத்தில் அல்லது அதற்கு கடனுதவி அளிக்கும் வங்கியில் சம்பளம் பெறும் அதிகாரியாக அல்லது பணியாளராக இருக்கக் கூடாது.
5. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருந்து, அவ்வாறு விலக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு முடிவடையாமல் இருத்தல்.

6. சங்க உறுப்பினர் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருந்து அவ்வாறு இராஜினாமா செய்த நாளிலிருந்து ஓராண்டு காலம் முடிவடையாமல் இருத்தல்.
7. இதே வகையைச் சேர்ந்த பதிவு பெற்ற வேறு சங்கத்தில் ஏற்கனவே உறுப்பினராக இருத்தல்.
8. சங்க விவகார எல்லையிலிருந்து நிரந்தரமாக குடியிருப்பை மாற்றி இருக்கக்கூடாது.

**4.3. (7). கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களின் உரிமைகள்**

1. பால் தரத்தின் அடிப்படையில் கொள்முதல் விலை பெற உரிமை .
2. குறைவான செலவில் கறவை மாடுகளுக்குச் செயற்கை முறையில் கருவூட்டல் பெற உரிமை .
3. இணையம் / ஒன்றியம் நிர்ணயித்த விலையில் கால்நடை தீவனங்கள் பெற உரிமை.
4. சங்கம் நிகர இலாபம் ஈட்டும் பொழுது உறுப்பினர் பால் ஊற்றிய அளவிற்கு ஊக்கத் தொகை பெற உரிமை .
5. சங்கம் நிகர இலாபம் ஈட்டும் பொழுது போனஸ் பெற உரிமை.
6. சங்க நிகர இலாபம் ஈட்டும்பொழுது பங்கு ஈவுகள் பெற உரிமை.
7. சங்க அலுவலக நேரத்தில் உறுப்பினரோ அல்லது உறுப்பினரால் உரிமை வழங்கப்பட்ட பிற உறுப்பினரோ, சங்க நடவடிக்கைகள் மற்றும் சங்க கணக்குகளை எந்த நேரத்திலும் பார்க்க உரிமை.

**5) பால் உற்பத்தியாளர்கள் நலன்**

மூன்றடுக்கு பால் கூட்டுறவுகளின் அனைத்து நடவடிக்கைகளும் அதன் உறுப்பினர்களான பால் உற்பத்தியாளர்களை முதன்மையாகக்கொண்டு செயல்பட்டு வருகின்றது.

**5.1. திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி**

- பால் உற்பத்தியாளர்கள் இடர்பாடுகளை சந்திக்கின்ற பொழுது அவர்களுக்கு உதவவும் அவர்களுக்கு சங்கத்தின் மீதான விசுவாசத்தை அதிகரிக்கவும், ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. அந்த நிதி திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி என அழைக்கப்படுகிறது.
- இந்த நிதிக்கு உற்பத்தியாளர் உறுப்பினர் மாதம் ஒன்றுக்கு ரூபாய்.1/—வீதம் பால் பணப்பட்டுவாடாவிலிருந்து செலுத்தவேண்டும். அதற்கு இணையாக

சங்கம் மற்றும் ஒன்றியம் தலா 50 பைசா வீதம் ரூ.1/–ஐ இந் நிதியில் செலுத்தவேண்டும்.

- விபத்துகளில் சந்தாதாரர் இறந்தாலோ அல்லது உடல் உறுப்பு இழப்பு ஏற்பட்டாலோ இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படும். மேலும், அத்தகைய உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு, கல்வி மற்றும் திருமண உதவி நிதியும் வழங்கப்படும்.
- இந்நலநிதியிலிருந்து முழுமையான நிதியுதவி பெற விபத்து ஏற்பட்ட நாளுக்கு முந்தைய நாளுடன் முடிந்த ஓராண்டு காலத்திற்குள் பால் ஊற்றும் உறுப்பினர் குறைந்தபட்சம் 120 லிட்டர் பால் 180 நாட்களுக்குள் வழங்கியிருக்க வேண்டும்
- அரசாணை (நிலை) எண்.306, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை (பா.உ.1), நாள்.20.11.2013ன்படி, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உற்பத்தியாளர் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிதி உதவி | திருத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | விபத்தின் காரணமாக மரணமடைந்தால் | ரூ.1.75 இலட்சம் |
| 2 | விபத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட உடல் உறுப்புகள் இழந்தால் | ரூ.1.75 இலட்சம் |
| 3 | விபத்தில் ஏதாவது ஒரு உடல் உறுப்பு இழந்தால் | ரூ.75,000/– |
| 4(அ) | வரிசை எண். (1) அல்லது (2) அல்லது (3) ல் தெரிவிக்கப்பட்ட நிதி உதவியுடன்<br>கூடுதலாக கல்வி உதவித்தொகை –21 வயதுக்குட்பட்ட இரண்டு குழந்தைகளுக்கு | ரூ.10,000/– |
| 4(ஆ) | வரிசை எண். (1) அல்லது (2) அல்லது (3) ல் தெரிவிக்கப்பட்ட நிதி உதவியுடன்<br>கூடுதலாக திருமண உதவித்தொகை – திருமணம் செய்ய சட்டப்படி வயது தகுதியுடைய ஒரு பெண் குழந்தைக்கு | ரூ.10,000/– |

இந்த நிதியிலிருந்து, ரூ.85.75 இலட்சம் 49 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.07.2015 அன்று வழங்கப்பட்டது.

**5.1.(1) இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான வழிமுறைகள்**

- இத்திட்டத்தில் சந்தாதாரராக சேர்வதற்கு தனியாக மனு அளிக்க வேண்டியதில்லை. சங்கத்தில் உறுப்பினராக இருந்து, இத்திட்டத்தில்

சேருவதற்கு விருப்பம் தெரிவிக்கின்ற அனைவரும் சந்தாதாரராக சேர்த்துக்கொள்ளப்பட்டு, அவர்களின் பால் பண பட்டுவாடா தொகையிலிருந்து, மாதந்தோறும் ஒரு ரூபாய் வீதம் தொடர்ந்து பிடித்தம் செய்து இந்நலநிதிக்கு செலுத்தப்படும்.

- சந்தாதாரர் விபத்தின் காரணமாக இறக்க நேர்ந்தாலோ அல்லது நிரந்தர ஊனமடைந்தலோ, அவரின் குடும்பத்தினர்கள் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற இணைப்பு–5ல் காணும் படிவத்தில் (படிவம்–3) சங்கத்திற்கு உரிய சான்றாவணங்களுடன் மனுவினை வழங்க வேண்டும்.
- கல்வி உதவி மற்றும் திருமண உதவி பெறுவதற்காக மேற்குறிப்பிட்ட குடும்பத்தினர்கள் இணைப்பு–6ல் காணும் படிவத்தில் (படிவம்–5) சங்கத்திற்கு உரிய சான்றாவணங்களுடன் மனுவினை வழங்க வேண்டும்.
- படிவத்தினை பூர்த்தி செய்வதற்கும் / சான்றாவணங்கள் பெறுவதற்கும் சம்பந்தப்பட்ட சங்கத்தின் செயலாளர்/தலைவர் மற்றும் இயக்குநர்கள் உரிய ஆலோசனைகள் வழங்குவார்கள்.

**5.2. பால் கொள்முதல் விலை உயர்வு**

கடந்த நான்கு ஆண்டுகளில் பால் கொள்முதல் விலை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | முதல் | வரை | எருமை பால் லிட்டர் ஒன்றுக்கு 7% கொழுப்பு மற்றும் 8.8% இதர சத்து | உயர்த்தி வழங்கிய தொகை ரூ. | பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு மொத்த சத்து 12.5% | உயர்த்தி வழங்கிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 06.02.2011 | 17.11.2011 | 26.00 | –– | 18.00 | –– |
| 2 | 18.11.2011 | 31.12.2013 | 28.00 | 2.00 | 20.00 | 2.00 |
| 3 | 01.01.2014 | 31.10.2014 | 31.00 | 3.00 | 23.00 | 3.00 |
| 4 | 01.11.2014 | நாளது தேதிவரை | 35.00 | 4.00 | 28.00 | 5.00 |
| | **மொத்தம்** | | | **9.00** | | **10.00** |

- பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்ய **18.11.2011** முதல் பசும் பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.18/–லிருந்து ரூ.20/– ஆகவும் எருமைப்பால் கொள்முதல் விலையை ரூ.26/–லிருந்து ரூ.28/– ஆகவும் உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடப்பட்டது.

- மீண்டும், 01.01.2014 முதல் பசும்பால் கொள்முதல் விலையை ரூ. 20/–லிருந்து ரூ.23/– ஆகவும், எருமைப்பால் கொள்முதல் விலையை ரூ.28/–லிருந்து ரூ.31/– ஆகவும் உயர்த்தப்பட்டது.
- 01.01.2014ல் பால் கொள்முதல் விலையை உயர்த்தி பால் விற்பனை விலை உயர்த்தப்படாததால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணம் பட்டுவாடாவை உறுதி செய்யவும், நிலுவையை குறைக்கவும் ரூ.76.29 கோடி வழிவகை முன்பணமாக அரசு வழங்கியுள்ளது. இணையத்திற்கு இவ்வகையில் ஏற்படும் நிதியிழப்பினை ஈடுசெய்ய மே 2011 முதல் நவம்பர் 2011 வரை ரூ.115.85 கோடி மற்றும் 2014 ஆம் ஆண்டில் ரூ.76.29 கோடி என இது வரை ரூ.192.14 கோடி வழங்கியுள்ளது.
- 1.11.2014ல் கொள்முதல் விலை பசும்பால் (லிட்டர் ஒன்றுக்கு) ரூ.5/–ம், எருமைப்பால் (லிட்டர் ஒன்றுக்கு) ரூ.4/–ம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதுவே ஒரே முறையில் உயர்த்தப்பட்ட அதிகபட்ச கொள்முதல் விலை ஆகும்.
- கடந்த நான்கு ஆண்டுகளில் பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.10/– உயர்த்தப்பட்டுள்ளது. அதே போல் எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.9/– உயர்த்தப்பட்டுள்ளது.

### 5.3.பால் உற்பத்தியாளர்களுக்கு ஒன்றியங்கள் வழங்கும் ஊக்கத்தொகை

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் செலவுகளை விட கூடுதல் வருமானம் ஈட்டும் நிலையில், பால் உற்பத்தியாளர்களுக்கு அந்த வருமானத்தை பகிர்ந்தளிக்கும் நோக்கில் ஊக்கத் தொகை வழங்குகின்றன. ஒன்றியங்கள் ஈட்டும் கூடுதல் வருமானத்திற்கு ஏற்ப இந்த ஊக்கத் தொகையானது ஒரு லிட்டருக்கு 60 பைசா முதல் ரூ.1.60 வரை வழங்கப்படுகிறது. பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.157.22 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை பெறுவதற்கு சங்கத்தின் உறுப்பினர்கள் தனியாக மனு அளிக்க வேண்டியதில்லை. ஒன்றியம் நிதி வழங்குகின்ற போது இத்தொகை உறுப்பினர்களுக்கு அவர்கள் சங்கத்திற்கு வழங்கிய பாலின் அளவு மற்றும் தரத்திற்கு ஏற்ப கணக்கிட்டு வழங்கப்படும்.

### 5.4. தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் போனஸ்

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் துணை விதிகளில் சங்கம் ஈட்டும் நிகர இலாபத்தில் 50 விழுக்காடு வரை உறுப்பினர்களுக்கு வழங்க

வழிவகை செய்யப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு சங்கங்கள் இலாபம் ஈட்டும் போது அத்தொகை உறுப்பினர்களுக்கு பங்குகளுக்கான ஈவுத்தொகை, ஊக்கத் தொகை மற்றும் 50 சதவீத போனஸ் ஆகியவை அவர்கள் சங்கத்திற்கு அளிக்கும் பாலின் மதிப்பிற்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 1.09 இலட்சம் உறுப்பினர்களுக்கு ரூ.57.29 கோடி, போனஸ், பங்கு ஈவுத்தொகை மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- மேற்படி பணப்பலன்களை பெறுவதற்கு, சங்கத்தின் உறுப்பினர்கள் தனியாக மனு அளிக்க வேண்டியதில்லை. சங்கம் தணிக்கை அறிக்கையின்படி நிகர இலாபம் ஈட்டுகின்ற பொழுது கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 72 மற்றும் சங்கத் துணைவிதியின் கீழ் சங்கத்தின் பொதுப்பேரவை ஒப்புதலுடன் உறுப்பினர்களுக்கு அவர்கள் சங்கத்திற்கு வழங்கிய பாலின் அளவு மற்றும் தரத்திற்கு ஏற்ப கணக்கிட்டு வழங்கப்படும். பங்குதாரர்களுக்கு (குறிப்பிட்ட காலத்தில் பால் வழங்காத உறுப்பினர் உட்பட) பங்கு ஈவுத்தொகையும் வழங்கப்படும்.

**5.5. மானிய விலையில் கால்நடை தீவனம் விநியோகம்**

கால்நடை தீவனங்களின் பற்றாக்குறை காரணமாக பால் கொள்முதல் குறையக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு, 2013–14ம் ஆண்டில் ரூ.35.32 கோடி செலவில் 3,21,521 பால் உற்பத்தியாளருக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் மற்றும் பசுந்தீவனம் வழங்கப்பட்டது. இதன்படி தீவனத்திற்காக கிலோவுக்கு ரூ.4/– மற்றும் தாது உப்புக்கலவை கிலோவுக்கு ரூ.25/–ம் மானியமாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

தற்பொழுது கால்நடை தீவனம் வழங்க அரசின் மானியம் மே 2014 வரையில் செலவழிக்கப்பட்டுள்ள நிலையில், பால் உற்பத்தியாளர்கள் கறவை இனங்களுக்கு தொடர்ந்து கால்நடை தீவனம் வழங்குவதை ஊக்கப்படுத்தும் விதமாக 10 மாவட்ட ஒன்றியங்களில், கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக்கலவை ஆகியவைகள் ஒன்றியத்தின் நிதியினை பயன்படுத்தி கிலோ ஒன்றுக்கு ரூ.2/– முதல் ரூ.4/– வரை விற்பனை விலை குறைவாகவும் மற்றும் தாது உப்பு கலவை கிலோ ஒன்றுக்கு ரூ.25/– குறைவாகவும் வழங்கி வருகின்றன.

**5.6. செயற்கை முறை கருவூட்டல்**

பயிற்சி பெற்ற கிராம நிலை பணியாளர் மற்றும் ஒன்றியங்களின் கால்நடை மருத்துவர்கள் மூலம் பால் உற்பத்தியாளர்களின் வீடுகளுக்கே சென்று அவர்களின் கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் பணி செய்யப்படுகிறது. தற்போது 2014–15ஆம் ஆண்டில் 18.55 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் கறவையினங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்துகொள்ள சங்கத்தின் உறுப்பினர்கள் தனியாக மனு அளிக்க வேண்டியதில்லை. சங்கத்தின் பணியாளரான செயலாளர்/கிராமநிலை அலுவலர் ஆகியோர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருப்பதால் அவர்கள் மூலம் இந்த சேவை உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெறும். மேலும் ஒன்றியத்தின் கால்நடை மருத்துவர் சங்கத்திற்கு வருகை தரும் நாள் மற்றும் நேரம் உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கும். அந்த நாட்களில், செயற்கை கருவூட்டல் உட்பட கால்நடைகளுக்கு தேவைப்படும் மருத்துவ சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

**5.7. உறுப்பினர்களுக்கு நட்சத்திர அந்தஸ்து வழங்குதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தி பாராட்டும் விதமாக ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் தலா 300 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.1.02 கோடி மதிப்பில் நட்சத்திர அந்தஸ்து வழங்கப்படும் என்று 17.04.2013 அன்று தமிழக சட்டமன்றப்பேரவையில் அறிவித்தார்கள்.

அதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் வாரியாக 300 சிறந்த பால் உற்பத்தியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு நட்சத்திர அந்தஸ்துக்கான சான்றிதழ் மற்றும் முதல் 100 இடங்களை பெற்றவர்களுக்கு தலா ரூ.3,000/– ரொக்கப் பரிசாகவும், இரண்டாம் 100 இடங்களை பெற்றவர்களுக்கு தலா ரூ.2,000/– ரொக்கப் பரிசாகவும் மூன்றாம் 100 இடங்களை பெற்றவர்களுக்கு தலா ரூ.1,000/– ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் 5,100 சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கு நட்சத்திர அந்தஸ்தும், ரொக்கப்பரிசும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களுக்கான நட்சத்திர அந்தஸ்து பெற சங்கத்தின் உறுப்பினர்கள் தனியாக மனு அளிக்க வேண்டியதில்லை. உறுப்பினர்கள் சங்கத்திற்கு வழங்கிய பாலின் அளவு மற்றும் தரத்தின்

அடிப்படையில், மாவட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்) மற்றும் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களின் பொது மேலாளர் ஆகியோர்கள் இந்த நட்சத்திர அந்தஸ்து மற்றும் பரிசுத்தொகையினை பெறுவதற்கான உறுப்பினர்களை தெரிவு செய்வார்கள்.

**5.8. சங்கங்களுக்கு நட்சத்திர அந்தஸ்து வழங்குதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.14.45 இலட்சம் மதிப்பில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் பால் வழங்கும் 10 சிறந்த தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நட்சத்திர அந்தஸ்து வழங்கப்படும் என்று 17.04.2013 அன்று சட்டமன்றப்பேரவையில் அறிவித்தார்கள்.

அதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்து 10 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நட்சத்திர அந்தஸ்திற்கான சான்றிதழும், முதலிடம் பெறும் சங்கத்திற்கு ரூ.25,000/–ம் இரண்டாம் இடம் பெறும் சங்கத்திற்கு ரூ.15,000/–ம் மூன்றாம் இடம் பெறும் சங்கத்திற்கு ரூ.10,000/–ம் மற்ற ஏழு இடங்களை பெறும் சங்கங்களுக்கு தலா ரூ.5,000/– மும் வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் 170 சங்கங்களுக்கு நட்சத்திர அந்தஸ்தும் ரொக்கப் பரிசும் இந்த ஆண்டு வழங்கப்பட்டது.

- இத்திட்டத்தின் கீழ் நட்சத்திர அந்தஸ்து பெற, சங்கங்கள், குறிப்பிட்ட ஆண்டில் ஒன்றியத்திற்கு அனுப்பிய பாலின் அளவு மற்றும் தரத்தின் அடிப்படையில், மாவட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்) மற்றும் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களின் பொது மேலாளர் ஆகியோர்கள் இந்த நட்சத்திர அந்தஸ்து மற்றும் பரிசுத் தொகையினை பெறுவதற்கான சங்கங்களை தெரிவு செய்வார்கள்.

**5.9. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்**

பாலின் தரத்தை நிலைப்படுத்தவும், வைப்புத்திறனை நீட்டிக்கவும், பால் உற்பத்தியாளர்கள் எந்நேரத்திலும் பால் வழங்கவும் 2,000, 3,000 மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன.

கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன.

1. சங்கத்தின் கொள்முதல் அல்லது அதன் தொகுப்பு சங்கங்களின் கூட்டு கொள்முதல் நாள் ஒன்றுக்கு சராசரியாக குறைந்தபட்சம் 2,000 லிட்டர் இருக்கவேண்டும்.

2. தொகுப்பு சங்கங்கள் (Cluster Societies) அதிகபட்சம் 10 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் இருக்க வேண்டும்.
3. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவ போதுமான இடவசதி / கட்டட வசதி சங்கத்தில் இருக்க வேண்டும்.

இதுவரை, 274 மொத்த பால் குளிர்விப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன் குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு 11.79 இலட்சம் லிட்டர் ஆகும்.

### 5.10. கோமாரி நோய் தடுப்புத் திட்டம்

கால்நடை பராமரிப்புத் துறையின் ஒருங்கிணைப்புடன் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 01.09.2014 முதல் 21.09.2014 முடிய 21 நாட்களுக்கு கால்நடை பராமரிப்புத்துறையுடன் இணைந்து தீவிர நடவடிக்கையாக கூட்டுறவு அமைப்பில் உள்ள 17 இலட்சத்திற்கும் கூடுதலான கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. தொடர்ச்சியாக விடுபட்ட கால்நடைகளுக்கும் மூன்று வாரத்திற்குள் தடுப்பூசிகள் போடப்பட்டன. கூட்டுறவு அமைப்பில் உள்ள 160 கால்நடை மருத்துவர்கள் மற்றும் 2,600 கிராமநிலை பணியாளர்கள் இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 2014–15 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் சுற்று தடுப்பூசி 01.03.15 முதல் 21.03.15 முடிய 21 நாட்களுக்கு போடப்பட்டன. தொடர்ச்சியாக விடுபட்ட கால்நடைகளுக்கும் 31.03.2015–க்குள் தடுப்பூசிகள் போடப்பட்டன.

- இத்திட்டத்தின் கீழ் கறவையினங்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட சங்கத்தின் உறுப்பினர்கள் தனியாக மனு அளிக்க வேண்டியதில்லை. சங்கத்தின் பணியாளரான செயலாளர்/கிராமநிலை அலுவலர் ஆகியோர்கள் உதவியுடன் ஒன்றியத்தின் கால்நடை மருத்துவர் அல்லது கால்நடைதுறையில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள் ஆகியோர்களால் ஒரு குறிப்பிட்ட நாளில் கிராமங்களில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் இந்த தடுப்பூசி போடப்படும். தடுப்பூசி போடப்படும் நாள் சங்கத்தின் விளம்பர பலகை மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் தெரிவிக்கப்படும். உறுப்பினர்கள் நேரடியாக தங்களது கறவையினங்களை அந்த நாளில் கொண்டு வந்து தடுப்பூசி போட்டு பயனடையலாம்.

**6.பால் கூட்டுறவு ஒன்றியங்களின் செயல்பாடுகள்**

தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட ஒன்றியங்களின் உறுப்பினர்களாக செயல்படுகின்றன.

தூய பால் உற்பத்தி வழிமுறைகளைப் பின்பற்றி, சங்கங்களில் பால் கொள்முதல் செய்தல், தரத்தின் அடிப்படையில் பால்பணம் வழங்குதல், கால்நடைகளுக்கான இடுபொருள் உதவி வழங்குதல், கால்நடைகளின் நலம் பேணுதல், கால்நடைத் தீவனம் மற்றும் பசும் புல் வழங்குதல், பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களை மாவட்ட அளவில் செயல்படுத்துதல், பால் விற்பனை செய்தல், பெருநகர பால் விற்பனை நிலையங்கள் மூலமும், உள்ளூர் பால் விற்பனை நிலையங்கள் மூலமும் உபரி பாலிலிருந்து கொழுப்பு நீக்கி, மதிப்புக்கூட்டிய பால் உபபொருட்களை தயாரித்தல் ஆகியவை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் முக்கிய பணிகளாகும்.

**6.1. ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலை**

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் கால்நடை தீவன தொழிற்சாலை ஒன்று 1982ம் ஆண்டு முதல் இயக்கப்படுகிறது. இந்நிலையம் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்டது. பல்வேறு வகையான தீவனங்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு துறைக்கும் வழங்கப்படுகின்றன. சமீபத்தில், ரூ.3.50 கோடி முதலீட்டில், மூலப்பொருள் மற்றும் கால்நடை தீவன சேமிப்பு கிடங்கின் கொள்ளளவு 3,350 மெட்ரிக் டன் அதிகரிக்கப்பட்டு தற்போது 6,000 மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது. இந்த தீவன ஆலையின் உற்பத்தி திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்னிலிருந்து நாளொன்றுக்கு 150 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க ரூ.10.72 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**6. 2. தாது உப்புக் கலவை தொழிற்சாலைகள்**

நாளொன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட நான்கு தாது உப்புக்கலவை தொழிற்சாலைகள் விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் இயங்கி வருகின்றன.

**6.3. பல்வேறு வகையான கால்நடை தீவனங்கள் மற்றும் தாது உப்பு கலவை (கிலோ ஒன்றுக்கு) விற்பனை விலை (ரூபாயில்) :–**

| வ. எண் | விவரம் | தூள் வடிவம் | குச்சி வடிவம் | புரதசத்து |
|---|---|---|---|---|
| 1. | சிறப்பு கறவைமாட்டுத் தீவனம் (SMR) | 16.80 | 17.00 | 16–18% |
| 2. | பால்பெருக்கு தீவனம்(MR) | 22.20 | 22.80 | >20% |
| 3. | கன்று தீவனம் | 24.10 | – | 16–18% |
| 4. | உறைவிந்து நிலையம் அ. பொலிகாளை தீவனம் | 23.25 | 23.85 | 15–20% |
| | ஆ. கன்று தீவனம் | 17.75 | – | 16–18% |
| 5 | தாது உப்பு கலவை | 50.00 | – | |

## 7. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்)

17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைமை நிறுவனமான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 01.02.1981 அன்று ஏற்படுத்தப்பட்டது. இணையத்தின் மூன்று பால்பண்ணைகள் சென்னையில் மாதவரம், அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூரில் செயல்பட்டு வருகின்றன. மாநகர பால்பண்ணைகள், கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து பாலினைப் பெற்று பதப்படுத்தி, பால்பைகளில் நிரப்பி சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றன. தமிழகத்தில், பால் விற்பனையில், கூட்டுறவுகளின் **“சந்தை பங்களிப்பு”** கணிசமான அளவு உயர்ந்து தமிழகத்தின் சந்தை பங்களிப்பில் **“ஆவின்”** பெரும்பங்கு வகிக்கிறது. மேலும் அம்பத்தூரில் அமைந்துள்ள பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை பால் உபபொருட்கள் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. இணையம் நுகர்வோரின் தேவைகளுக்கும், விருப்பத்திற்கும் முன்னுரிமை அளித்து, **“ஆவின்”** வணிக சின்னத்தில் தூய பால் மற்றும் தரமான பால் உபபொருட்களை விநியோகிக்கிறது.

### 7.1. பால் நுகர்வோர்களுக்கு இணையத்தால் வழங்கப்படும் சேவைகள்

1. இணையம், சென்னை மாநகர மக்களுக்கு, நல்ல தரமான பாலினை, 781 டிப்போக்கள், 93 பாலகங்கள் மற்றும் 49 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நுகர்வோர்களுக்கு வழங்கி வருகின்றன.
2. பால் நுகர்வோர்களின் சேவைக்காக, சென்னை நந்தனத்தில், 24 மணி நேர நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர்கள் **கட்டணமில்லா தொலைபேசி எண். 18004253300–ல் தொடர்பு கொள்ளலாம்.**
3. நுகர்வோர்களுக்கு பால் அட்டைகள், பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மண்டல பால் விற்பனை அலுவலகங்கள் மூலம் விற்பனை

செய்யப்படுகின்றன. மேலும் பால் அட்டைகள் எளிதாக நுகர்வோர்களுக்கு கிடைக்கும் வகையில், அவர்கள் பால் பெறும் டிப்போக்கள், கூட்டுறவு விற்பனை மையங்கள் மற்றும் இதர இடங்களிலும் வழங்கப்படுகிறது.

4. நுகர்வோர்கள் விரும்பும் வகையில், **"பால் நிறுத்தும் முறை"** செயல்படுத்தப்பட்டு வருகிறது.
5. மொத்த பால் நுகர்வோர்களான சிற்றுண்டியகங்கள், நிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் இரயில்வே நிலையங்களிலும் நேரடியாக பால் விற்பனை செய்யப்படுகிறது.
6. சென்னை மாநகரில் உள்ள அனைத்து பால்பண்ணைகளுக்கும் ISO மற்றும் HACCP சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சுற்றுப்புற சூழல் மேலாண்மையை செயல்படுத்தியமைக்காக சென்னை பெருநகர பால்பண்ணைகள் ISO 14001 சான்று பெற்றுள்ளன. இதனால், ஆவின் மூலம் விற்பனை செய்யப்படும், பால் மற்றும் பால் உபபொருட்களின் தரம் உறுதி செய்யப்படுகிறது.
7. திருமணம் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்காக தேவைப்படும் பாலினை பெறுவதற்கு, வட்டார பால் விற்பனை அலுவலகங்களில், முன்பதிவு 10 நாட்களுக்கு முன்பாக செய்து கொள்ளலாம்.
8. சென்னை மாநகரில், ஆவின் வட்டார பால் விற்பனை அலுவலகங்கள், 16 இடங்களில் இயங்கி வருகின்றன. (இணைப்பு எண். 7–ல் காணவும்)
9. பால் பொருட்களின் தற்போதைய விலைப்பட்டியல் இணைப்பு 8–ல் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### 7.2. விற்பனை செய்யப்படும் பாலின் வகைகள்

| வ. எண் | பாலின் வகைகள் | கொழுப்பு % | இதர சத்து % | அட்டைதாரர் களுக்கு (1/2 லிட்டர்) ரூ. | அதிகபட்ச சில்லரை விற்பனை விலை (1/2 லிட்டர்) ரூ. | பால் பை நிறம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | இருநிலை சமன்படுத்தப்பட்ட பால் | 1.5 | 9.0 | 16.50 | 17.00 | மெஜந்தா |
| 2. | சமன்படுத்தப்பட்ட பால் | 3 | 8.5 | 17.00 | 18.50 | நீலம் |
| 3. | நிலைப்படுத்தப்பட்ட பால் | 4.5 | 8.5 | 19.50 | 20.50 | பச்சை |
| 4. | முழுக்கொழுப்பு செறிந்த பால் | 6 | 9 | 21.50 | 22.50 | ஆரஞ்சு |

- பால் நுகர்வோர்கள் மாதாந்திர பால் அட்டைகள் பெறுவதற்கென, தனி விண்ணப்பப்படிவம் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. அருகில் உள்ள மண்டல பால் விற்பனை அலுவலகம் / பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் கடிதம் மற்றும் குடியிருப்பு சான்றினை இணைத்து வழங்கினால் போதுமானதாகும்.

## 8. தரக்கட்டுப்பாடு ஆய்வகம்

நுகர்வோர்க்குத் தரமான பால் விநியோகம் செய்வதை உறுதிசெய்யும் நோக்கத்துடன், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டில், தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், சென்னை மாதவரம் பால்பண்ணை காலனியில் இயங்கி வருகிறது. இந்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் இந்த ஆய்வகத்திற்கு, பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 1992ன்கீழ், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் கடித எண்.9–15/97 டி.பி. நாள்.21.08.2002 வழியாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த ஆய்வகத்தில் பால் மற்றும் பால் உபபொருட்களின் மாதிரிகள் பகுத்தாய்வு செய்யப்படுகின்றன. இந்த ஆய்வகத்தில் பால் மற்றும் பால் பொருட்களில் அடங்கியுள்ள கொழுப்பு, கொழுப்பில்லா இதர சத்துக்கள், கலப்பட பொருட்கள், பூஞ்சை, பூச்சிகொல்லி மருந்துகளின் எச்சஅளவு, தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள் மற்றும் நைட்ரஜன் அளவு ஆகியவைகளை பகுத்தாயும் வசதிகள் உள்ளன.

மேலும் 5.08.2011 முதல் 2006ஆம் ஆண்டின் உணவு பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. எனினும் இந்திய அரசின், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையத்தின் கடித எண்.83–Dir(Enf.)/FSSAI/2011, நாள்.05.07.2011–ல் உணவு கலப்படதடை சட்டத்தில் (PFA) வரையறுக்கப்பட்டுள்ள முறைகளின் அடிப்படையில் உணவு பரிசோதனையில் ஈடுபடும் அனைத்து ஆய்வகங்களும் 2006 ஆம் ஆண்டு உணவு பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம் பிரிவு 98ன் கீழ் மறு அறிவிப்பு வரும் வரை, தொடர்ந்து செயல்படலாம் என தெளிவுரைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து, இந்த ஆய்வகத்தில் பால் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகிறது.

**9. திட்டங்கள்**

**9.1. பகுதி -2 திட்டம்: 2014-15**

இத்திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 2014–15 ஆம் ஆண்டில் ரூ.2.74 கோடி நிதி பகுதி–2 திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**I.** பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு 76 பகுப்பாய்வு கருவிகள் (Milk Analyzers) ரூ.45.74 இலட்சம் மதிப்பீட்டிலும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு 500 துருவுறா பால்கொள்கலன்கள்ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன. (அரசின் மானியம் 50 சதவீதம் மற்றும் பயனாளி சங்கங்களின் பங்களிப்பு 50 சதவீதம்)

**II. பசுமை பண்ணை முனைப்பு**

அ) சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் இரண்டு சூரிய ஒளி செறிவூட்டி கருவிகள் மூலம் பெறப்படும் சூரிய ஒளி வெப்ப சக்தி கொண்டு பால் பதப்படுத்துதல் ரூ.100.00 இலட்சம் செலவில் நிறுவப்பட உள்ளது.

ஆ) மொத்த பால் குளிர்விப்பான்களுக்கு 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சூரிய ஒளி கொதிகலன் ரூ.57.50 இலட்சம் செலவில் நிறுவப்பட உள்ளது.

**உட்கட்டமைப்பு வசதிகள்**

பால் பதப்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதற்கு ஒன்றியங்கள் அதன் சொந்த நிதியிலிருந்தும் மற்றும் பகுதி–2 திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம், தேசிய புரதசத்து பெருக்குத் திட்டம், தூய பால் உற்பத்தி திட்டம், தீவிர பால் பெருக்குத் திட்டம், கூட்டுறவுகளுக்கு உதவுதல்–புனரமைப்புத்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் நிதி உதவி பெற்று தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்கிக் கொள்கின்றன.

**9.2. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்**

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2007–08 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் துணை திட்டமாக தேசிய புரத சத்து வழங்கும் திட்டம் (**NMPS**) 2011 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டங்களின் மூலம் பால் வளத்துறைக்கு, 2011–12 முதல் 2014–15 வரை ரூ.131.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்துறையின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளின் நலன் பேணுதல், பால் உற்பத்தியை அதிகரித்தல், பால் கொள்முதலுக்கான உட்கட்டமைப்புகளான

பதப்படுத்துதல், குளிர்பதன கிடங்குகள் மேம்படுத்துதல், மற்றும் விற்பனையை மேம்படுத்துதல் போன்றவை இத் திட்டத்தில் அடங்கும்.

**9.3. தூய பால் உற்பத்தித் திட்டம்**

இத்திட்டத்தின் குறிக்கோள் கிராமப்புற விவசாயிகளுக்கு தூய பால் உற்பத்தி குறித்த பயிற்சி அளித்தல்; பால் உற்பத்தியாளர்களுக்கு தேவையான நுண்மத்தடை திரவங்கள், பாத்திரங்கள் அளித்தல்; ஒன்றியங்களிலுள்ள பால்பண்ணைகள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களிலுள்ள பால் பரிசோதனை கூடங்களை மேம்படுத்துதல்; பாலின் ஆரம்ப நிலை தரத்தை அதிகரிக்க தேவைப்படும் மொத்த பால் குளிர்விப்பான்களை கிராம அளவில் நிறுவுதல் ஆகும். திருத்தப்பட்ட விதி 2012–13ன்படி முந்தைய நிதியாண்டில் ரூபாய் ஒரு கோடிக்கும் மேல் திரட்டு இலாபம் ஈட்டிய ஒன்றியங்களுக்கு அனைத்து இனங்களுக்கும் 75 சதவீதம் மானியமும், மீதமுள்ள ஒன்றியங்களுக்கு 100 சதவீதம் மானியமும் இத்திட்டத்தின் வாயிலாக வழங்கப்படுகிறது.

**9.4. தீவிர பால்பெருக்கத்திட்டம்**

இத்திட்டத்தின் நோக்கம் மாவட்டங்களில் பால் கொள்முதலை பெருக்குதல், பால் விற்பனையை உயர்த்துதல், பால் விற்பனை மற்றும் பால் பதப்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், இடுபொருட்கள் வழங்குதல் மற்றும் மனித வளத்தை மேம்படுத்துதல் ஆகும். இதற்கான முழுநிதியும் ஐந்தாண்டு காலத்திற்கு மானியமாக வழங்கப் படுகிறது.

இத்திட்டம் ரூ.17.80 கோடி மானியத்தில் ஏழு வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய நான்கு மாவட்ட ஒன்றியங்களில் செயலாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. அவை சிவகங்கை, இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் ஆகும். இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 1,04,347 பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**9.5. கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்புத் திட்டம்**

“கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்பு’’ என்னும் இத்திட்டம் நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களை புனரமைப்பதற்காக செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் நோக்கம், ஒன்றியங்களுக்கு ஏற்படும் பண நட்டத்தை முழுமையாக நீக்கி ஏழு ஆண்டுகளுக்குள் நிதி நிலைமையை மேம்படுத்தி சரிசெய்து கொள்வதற்காக மத்திய–மாநில அரசுகள் தலா 50 விழுக்காடு தொகையை மானியமாக

வழங்குவதாகும். இத்திட்டத்தில் பெறப்படும் நிதியின் பெரும்பகுதி நிலுவையிலுள்ள பால் உற்பத்தியாளர்களின் பால் பண பட்டுவாடாவிற்கென செலவிடப்படுகிறது.

இத்திட்டம் ஆறு வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய மூன்று மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. அவை திண்டுக்கல், காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகியவை ஆகும்.

**9.6.தேசிய கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பால் வள மேம்பாட்டுத்திட்டம்.**

**2014–15** ஆம் ஆண்டு முதல், தனித்தனியாக செயல்படுத்தப்பட்டு வந்த தீவிர பால் பெருக்கத் திட்டம், தரமான மற்றும் தூய பால் உற்பத்திக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம் மற்றும் ''கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்பு திட்டம்'' ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு, தேசிய கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பால்வள மேம்பாட்டு திட்டம் என செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், **2014–15** ஆம் ஆண்டிற்கு முன்பு அனுமதிக்கப்பட்ட இம்மூன்று திட்டங்கள் அவை முடியும் வரை தொடர்ந்து நடைபெறும்.

இத்திட்டத்தின் குறிக்கோள்கள் கீழ்வருமாறு:–

அ) தரமான பால் உற்பத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு

ஆ) பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் பாலை விற்பனை செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல்.

இ) பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி

ஈ) கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துதல்

உ) பால் உற்பத்தியை அதிகரிக்க தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் கால்நடை

தீவனம், தாது உப்புக் கலவை மற்றும் பல.

ஊ) நலிவடைந்த ஒன்றியங்களை புனரமைத்தல்

மத்திய அரசு, தேசிய பால்வள மேம்பாட்டு திட்டத்தின் (NPDD) கீழ் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், திருச்சி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.**4,015.79** இலட்சம் அனுமதித்துள்ளது. இதில் மத்திய அரசின் பங்களிப்பு ரூ.**1,808.125** இலட்சம் மற்றும் திட்டம் செயல்படுத்தப்படும் முகமையின் பங்களிப்பு ரூ.**2,207.665** இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் காலம் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

**9.7.தேசிய கால்நடை இயக்கம்**

கறவை பசுக்களின் பால் கறக்கும் மற்றும் இனப்பெருக்க திறனை மேம்படுத்தவும், சமச்சீர் தீவனம் அளிக்கும் முறைகளைப் பற்றியும் கறவை பசுக்களின் மேலாண்மை ஆகியவை தொடர்பாக கறவைப் பசு இன மேலாண்மை பயிற்சியினை, முன்னோடி பால் உற்பத்தியாளர்களுக்கு அளிப்பதன் மூலம் பால் உற்பத்தி அதிகரிப்பதோடு பால் உற்பத்தியாளர்களுடைய வருவாயும் அதிகரிக்கும். கறவை பசுக்களுக்கு கிடைக்கும் பசுந்தீவனத்தின் அளவு அதிகரித்து, பால் உற்பத்தி மற்றும் பாலின் தரத்தை மேம்படுத்தி, பால் உற்பத்தியாளர்களின் வருவாயை அதிகரிக்கச் செய்வதில் பசுந்தீவன அபிவிருத்தி முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நோக்கத்துடன், கீழ்காணும் திட்டங்கள் தேசிய கால்நடை இயக்கம் 2014–15ன் கீழ், செயல்படுத்தப்படுகிறது.

**அ) முன்னோடி விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி**

தேசிய கால்நடை இயக்கம் 2014–15 ன்கீழ், மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் முன்னோடி விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி (கறவை இனங்கள் மேலாண்மை மற்றும் திறனூக்க பயிற்சி) அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 7,500 பால் உற்பத்தியாளர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**ஆ) தீவன விதைகள் கொள்முதல் மற்றும் விநியோக திட்டம்**

தீவன விதைகள் கொள்முதல் மற்றும் விநியோக திட்டத்தின் கீழ் ரூ.103.65 இலட்சம் மதிப்பீட்டில் 19,150 பால் உற்பத்தியாளர்கள் பயன் அடையும் வகையில் பசுந் தீவன வளர்ப்புக்காக 130.50 மெட்ரிக் டன் தீவன மக்காச்சோளம், தீவன சோளம் மற்றும் ஓட்ஸ் விதைகள் வழங்கப்பட்டுள்ளது.

**(ரூ.இலட்சத்தில்)**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதி உதவி | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | தேசிய கால்நடை இயக்கம் உதவி | பயனாளியின் பங்கு | |
| 1 | முன்னோடி விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி | 37.5 | 0 | 37.5 |
| 2 | தீவன விதைகள் கொள்முதல் மற்றும் விநியோகம். | 77.74 | 25.91 | 103.65 |
| | **மொத்தம்** | **115.24** | **25.91** | **141.15** |

**9.8.தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம்**

திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை ஆகிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களிலும், அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர் ஆகிய பெருநகர பால் பண்ணைகளிலும் குளிர்சாதன வசதி மற்றும் குளிர்பதன கிடங்கு உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக ரூ.18.42 கோடி நிதி அனுமதிக்கப்பட்டது. இந்நிதி ஒதுக்கீட்டில், ரூ.8.70 கோடி மானியமாகவும் மீதமுள்ள ரூ.9.72 கோடி ஒன்றியங்களின் / இணையத்தின் சுய நிதியும் அடங்கும்.

மேற்படி திட்டத்தில், திருச்சி , சேலம், மாதவரம் ஆகிய இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது. அதே போல் அம்பத்தூர், சோழிங்கநல்லூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கட்டிடப்பணி, இயந்திர தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கான கொள்முதல் ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இதன் மூலம், மாநகர பால்பண்ணைகளின் குளிர்பதன வசதி 3.00 இலட்சம் லிட்டர் கூடுதலாக உயர்த்தப்படுகிறது. மேலும் ஒன்றியங்களில் குளிர்பதன வசதி 3.80 இலட்சம் லிட்டர் கூடுதலாகவும் மற்றும் 100 மெட்ரிக் டன் வெண்ணெய் உறை கிடங்கு கூடுதலாகவும் உயர்த்தப்படுகிறது.

**9.9. ஒருங்கிணைந்த கூட்டுறவு பால் பெருக்கத் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் மதுரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் உட்கட்டமைப்பு வசதிகளான குளிர்பதன சாதனங்கள், பால் சமச்சீர்ப்படுத்தும் இயந்திரம், கொழுப்பு பதப்படுத்தும் இயந்திரம், கொழுப்பு சேமிப்பு கலன், பாலை பாக்கெட் செய்யும் அதிவேக இயந்திரம், ஜெனரேட்டர், அதிநவீன முறையில் அமைக்கப்பட்ட குளிர்பதன இயந்திரம் மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள குளிரூட்டும் நிலையத்தை நவீனமாக்குதல் போன்ற பணிகளுக்காக ரூ.514.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மதுரை பால்பண்ணையின் கையாளும் திறனை நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டரிலிருந்து 5 இலட்சம் லிட்டராகவும், நாளொன்றுக்கு 10,000 லிட்டர் தயிர் உற்பத்தி செய்து சிப்பம் கட்டுதல் மற்றும் தற்போதுள்ள பால்பாக்கெட் குளிர் சாதனஅறையை 200 மெட்ரிக் டன் வெண்ணெய் உறை கிடங்கு அறையாக மாற்றி அமைத்தல் ஆகியவை முக்கிய பணிகளாகும்.

**9.10. சுயநிதி மூலம் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டம்**

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் தன்னுடைய பால்பண்ணையில் ரூ.4.00 கோடி செலவில் ஒரு மணி நேரத்திற்கு 20,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் இயந்திரம் (Milk Pasteurizer), கொழுப்பு நீக்கும் இயந்திரம் (Cream Separator) மற்றும் பால் சமன்படுத்தும் இயந்திரம் (Homogenizer) மற்றும் அதி வேகத்துடன் இயங்கும் நவீன பால் பை இயந்திரம் ஆகிய இயந்திரங்களைக் கொண்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளது. இதைத் தவிர, இணையம் மற்றும் ஒன்றியங்கள் தங்கள் சுயநிதியிலிருந்து இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை ரூ.16.03 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தியுள்ளன.

**10.சிறப்புத் திட்டங்கள்**

**10.1 திருவண்ணாமலை பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை:-**
**(Tiruvannamalai Dairy cum Powder Plant)**

